**வவுனியா மாவட்டத்தின் ஒன்பது கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்கம் - 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** வவுனியா மாவட்டத்தின் கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் 09 இன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2023 ஆண்டிற்கான வவுனியா மாவட்டத்தின் 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களுக்கும் முனைப்பயியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டதுடன், அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 03 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களிற்கு உரித்தான ரூபா 6,925,295 பெறுமதியான உரக் களஞ்சிய கட்டடங்கள் மற்றும் நெல் காயவிடும்தளம் என்பன நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உரக் களஞ்சிய கட்டடங்கள் மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படுவதுடன் நெல் காயவிடும்தளத்தின் பெறுமதி 2024 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்படும். | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 03 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் மீளாய்வாண்டில் நன்கொடையாக பெறப்பட்ட 14 எண்ணிக்கையான ரூபா 1,165,250 பெறுமதியான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடை சொத்துக்கள் 2024 ஆம் வருட நிதிக்கூற்றுக்களில் சேர்த்துகொள்ளப்படும். | நன்கொடையாக பெறப்பட்ட சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (இ) | குருக்கள்புதுக்குளம் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவினால் உழவியந்திரம் 2022 ஆம் ஆண்டு ரூபா 1,249,456 செலவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதன் பெறுமதியினை மீள் மதிப்பீடு செய்யப்படாமல் ரூபா 169,266 ஆக நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | 2024 கணக்கில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | செட்டிகுளம் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவின் கட்டடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்கு முறையே நூற்றுக்கு 5 மற்றும் நூற்றுக்கு 20 நேர் கோட்டுமுறையில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட வேண்டிய | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

போதிலும் குறைந்து செல்லும் விகிதத்தில் பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டது.

### 1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களில் மீளாய்வாண்டில் வருமதி மற்றும் சென்மதி மீதிகளான கூட்டுமொத்தம் ரூபா 21,533,397 காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றினை உறுதிப்படுத்துவதற்கு போதிய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்காமையால் அவற்றினை சான்றுபடுத்தமுடியாதள்ளது. | கணக்குகள் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் அழிவடைந்துள்ளமையினால் இத்தொகையினை நீக்குவதற்கு ஆணையாளர் நாயகத்தின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. | ஆவணங்கள் அழிவடைந்துள்ள உரிய கணக்கு மீதிகள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பம்பைமடு கமநல சேவை நிறைவேற்றுக் குழுவின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவரும் ரூபா 8,133,436 பெறுமதியான இரண்டு நிலையான வைப்புக்களின் நிலையான வைப்புச் சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | யுத்த காலத்தில் நிலையான வைப்பு பத்திரம் தவறவிடப்பட்டுள்ளது. வங்கிக்கு அறிவித்து புதிய பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான வைப்புச் சான்றிதழை பெற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.4. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2020 யூன் 25 ஆம் திகதியிடப்பட்ட 08/2020 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றுநிருபம் | 08 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய பிணைப்பணம் ரூபா 160,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிணைப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான 09 நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 3,260,796 தொகை மிகையொன்றாக காணப்பட்டதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,296,467 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதிப்பெறுபேறுகளின் ரூபா 5,557,263 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செட்டிகுளம் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவின் உழவியந்திரம் தொடர்பில் வாடகை நிலுவை ரூபா 115,000 கடந்த 2 வருடங்களாக அறவிடப்படாமலும் 2022 யூலை 21 ஆம் திகதிக்குப்பின் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாமலும் காணப்பட்டிருந்தது. ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாத காலப்பகுதிக்கான வாடகை ரூபா 240,000 தொகை நிலுவையாக் காணப்பட்டிருந்தது. | இவ்விடயத்தை நியாயசபைக்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. ஒப்பந்தம் மேற்கொள்ளப்படாத காலப்பகுதிக்குரிய வாடகையினை செலுத்துமாறும் உரிய நபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைகளினை உரிய காலத்தில் அறவிடவும் ஒப்பந்த காலத்தை நீடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செட்டிகுளம் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவிற்கும் கமக்காரருக்கும் இடையில் 2021 யூலை 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 10 இன் பிரகாரம் ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்னர் வைத்திருக்கும் ஒவ்வொரு நாட்களுக்கும் ஒரு நாளுக்கு ரூபா 2,000 மேலதிகக் கட்டணமாக அறவீடு செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் ஒப்பந்தம் முடிவடைந்து 502 நாட்கள் கடந்த நிலையிலும் மேலதிக கட்டணம் ரூபா 1,004,000 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இவ்விடயத்தை கமநல நியாயசபைக்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. | மேலதிக கட்டணத்தினை உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 07 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் குளங்களின் எல்லைகளை அடையாளப்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,019,735 பெறுமதியான 2,684 எல்லைக்கற்கள் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது கடந்த 03 தொடக்கம் 07 வருடங்களுக்கு மேலாக நிலையத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. | புதிய வகை எல்லைக்கற்கள் அறிமுகப்படுத்தப்பட்டதால் பழைய வகை எல்லைக்கற்களை அவற்றிற்கிடையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | எல்லைக் கற்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 04 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களிற்கு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ரூபா 818,485 நிதியில் தயாரிக்கப்பட்ட சேதனப் பசளையானது பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் நிலையத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. | அரச கொள்கைகளிற்கு அமைவாக இரசாயன உரம் அனுமதிக்கப்பட்ட நிலையில், விவசாயிகளிடமிருந்து கேள்வி குறைவடைந்த நிலை காணப்பட்டது. தற்போது விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைவாக விற்பனை செய்யப்பட்டும் நிலையத்தில் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.. | உரங்களினை தயாரிக்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் வருமதியாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10,973,032 இனை கடந்த 01 தொடக்கம் 12 வருடங்கள் வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீண்ட காலமாக தீர்க்கப்படாத வருமதிகளை பதிவழிப்பதற்கும் ஏனையவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | வருமதிகளை உரிய காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 08 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் 72 கமக்கார்களுக்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரத்திற்கான கடன் நிலுவைகள் ரூபா 10,007,184 இனை கடந்த 10 வருடங்கள் தொடக்கம் 12 வருடங்கள் வரையில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | கமநல சேவைகள் நிலையத்தினால் கடனாக வழங்கப்பட்ட இரண்டு சில்லு உழவு இயந்திரங்களின் கடன் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | கடன் நிலுவைகளினை உரிய காலத்தில் அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 07 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களிற்கு தீர்ப்பனவு செய்ய வேண்டிய ரூபா 7,942,589 பெறுமதியான சென்மதிகளினை கடந்த 01 தொடக்கம் 13 வருடங்களுக்கு மேலாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீண்ட காலமாக தீர்க்கப்படாத சென்மதிகளை புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கும் 2017 ம் ஆண்டு தொடக்கம் 2023 ம் ஆண்டு வரையான சென்மதிகள் உரிய நபர்களிற்கு செலுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | சென்மதிகளை உரிய காலத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படல் வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| செட்டிகுளம் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவிற்கு மானியமாக வழங்கப்பட வேண்டிய உரத்திற்காக அறவிடப்பட்ட ரூபா 513,580 தொகை நீண்டகாலமாக பயனாளிகளுக்கு செலுத்தப்படாமல் நிதிக் கூற்றுக்களில் பொறுப்பாக காட்டப்பட்டுள்ளது. | உரிய விவசாயிகளின் விபரங்கள் சரியாக இற்றைப்படுத்தப் படாதிருந்தமையால் மீளச்செலுத்த இயலாததாகவுள்ளதுடன் நீண்ட காலமாக தீர்க்கப்படாத சென்மதிகளை பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | குறித்த நிதியினை பயனாளிகளுக்கு மீளழிப்பதற்கு அல்லது முறையான அனுமதியின்கீழ் வருமானமாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 வாகன முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| வவுனியா மாவட்ட செயலகத்தினால் ரூபா7,039,193 செலவில் திருத்தப்பட்ட 07 உழவியந்திரங்கள் 2022 ஆகஸ்ட் 16 இல் 05 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அவற்றை பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | மேலும் திருத்தம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. திருத்தம் மேற்கொண்டு உழவு நடவடிக்கைக்காக பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உழவியந்திரங்களை பாவனைக்குட்படுத்து வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.6 சொத்து முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கனகராயன்குளம் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவிற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2011 ஆம் ஆண்டு ரூபா 1.5 மில்லியன் பெறுமதியில் நிர்மானிக்கப்பட்ட உரக் களஞ்சியம் 2018 ஆண்டு முதல் பாவனைக்குட்படுத்தாமல் உள்ளமை அவதானிக்கப்பட்டது. | குறித்த உரக்களஞ்சியத்தினை வேறு தேவையின் பொருட்டு பயனுள்ள வகையில் பாவனைக்கு உட்படுத்துவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. | உரக் களஞ்சியத்தினை பாவனைக்குட்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**4. கமநல வங்கி**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 07 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களிற்கு கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2012 பெப்ரவரி 29 ஆந் திகதி 04/2012 இலக்கமிடப்பட்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற பயிர்கடன்கள் வழங்கப்படுகின்ற திகதியிலிருந்து 06 மாதங்களுக்குள் அறவிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் கமநல வங்கியிடமிருந்து ரூபா 21,844,327 இனை கடனாக பெற்ற பயனாளிகளிடமிருந்து கடந்த 01 தொடக்கம் 14 வருடங்களுக்கு மேலாக நிலுவைகளினை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 28 கடனாளிகளின் கோவைகள் கமநல நியாயசபை மூலம் அறவிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மிகுதிக்கடன் தொகையானது அடுத்து வரும் நிதியாண்டில் அறவிடுவதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |